16.02.2026



**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், துறையூர்.**

**அசல் வழக்கு எண்.249/2021**

**வா.சா. 1–குமார், த/பெ. மாணிக்கம்**

**சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது**

**பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் வழக்குரை தாக்கல் செய்யும் போது என் தரப்பில் வழக்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் ஏற்கனவே சாட்சியம் அளித்த போது நான் தாக்கல் செய்த வம்சாவளி பட்டியலை பற்றி எனக்கு தெரியாது என சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 வம்சாவளி பட்டியலில் தைலம்மாள் கணவர் பெயரை சொல்லியிருக்கேனா என்றால் சொல்லியுள்ளேன். தைலம்மாவின் கணவர் பெயர் எனக்கு தெரியாது. தாவா சொத்து ஆதியில் தைலம்மாவிற்கு பாத்தியப்பட்டு அவர் இறந்தபிறகு அவருடைய வாரிசு காளியப்பனுக்கு பாத்தியப்பட்டது என குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரிதான். காளியப்பன் தைலம்மாவிற்கு வாரிசு என்பதை காண்பிக்க வழக்கில் ஆவணம் தாக்கல் செய்யவில்லை. எதன் அடிப்படையில் காளியப்பன் என்பவர் தைலம்மாவிற்கு நேரடி வாரிசு என சொல்கிறேன் என்றால்

பூர்வீகமாய் அடிப்படையில் நான் சொல்கின்றேன். என் தகப்பனார் சொல்லி தான் காளியப்பன் என்பவர் தைலம்மாள் வாரிசு என தெரிந்து கொண்டேன். என்னுடைய தகப்பனாரின் தகப்பனார் மருதைமூப்பன் ஆவார். காளியப்பனுக்கு திருமணம் செய்து கொண்டார் என்பது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பனாரும் அதை பற்றி தெரிவிக்கவில்லை. காளியப்பனுக்கு மருதை தான் வாரிசு என்று என் தகப்பனார் என்னிடம் சொன்னார். மருதை என்பவர் என் தகப்பனாரின் தகப்பனார் என்று சொன்னால் சரிதான். மருதைக்கு திருமணம் ஆகிவிட்டது. மருதைக்கு ஐந்து குழந்தைகள் இருந்தது. ஆண்கள் ஐந்து, பெண்கள் மூன்று என எட்டு மக்கள் உள்ளார்கள். என் தகப்பனாரின் தகப்பனார் மருதை வீரம்மாள் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இந்த வீரம்மாள், மருதைக்கு தான் நான் சொன்னது போன்று எட்டு மக்கள் ஆவார்கள். நான் வழக்குரையுடன் தாக்கல் செய்த வம்சாவளி பட்டியலில் இவ்வாறு மருதைக்கு எட்டு மக்கள் உள்ளார்கள் என குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியலில் சில வாரிசுகளை குறிப்பிடாமல் தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வம்சாவளி பட்டியல் இவ்வழக்கில் எற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்று சொன்னால் சரிதான்.

தற்போது மருதைமூப்பன் இறந்துவிட்டார். மருதைமூப்பனின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேன், ஆனால் வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை. மருதைமூப்பனின் இறப்பு சான்றிதழை தாக்கல் செய்துள்ளதாக வழக்குரையில் ஆவணமாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சாட்சி தாக்கல் செய்த வழக்குரையை படித்து பார்த்துவிட்டு இல்லை என்கிறார். மருதைக்கு வீரம்மாள் தான் மனைவி என்பதை காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

தாவா சொத்திற்கு மேல்புறம் எனக்கு சொத்து உள்ளது, அதன் சர்வே எண் நினைவில்லை. தாவா சொத்திற்கு மேல்புறம் என் சொத்திற்கு மேற்புறம் உள்ள நிலம் என் மனைவி பெயரில் உள்ளது. அதன் சர்வே நெம்பர் நினைவில்லை. சொத்து சொத்தின் பழைய சர்வே எண் நினைவில் இல்லை. தாவா சொத்திற்கு புதிய சர்வே எண் நினைவில் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் நான் தாக்கல் செய்த வழக்குரையில் குறிப்பிட்ட எண் எனக்கு நினைவில் இல்லை என்று சொன்னால் சரிதான். எனக்கு சர்வே எண்ணை பற்றி எதுவுமே தெரியாது, நான் கிரையம் பெற்ற சர்வே எண் வேறொன்று, தாவா சொத்து சர்வே நெம்பருக்கு உண்டான சர்வே எண் வேறொன்று என்று சொன்னால் சரிதான்.

16.02.2026



நான் கிரையம் வாங்கிய சொத்திற்கு உண்டான சர்வே நெம்பர் குறிப்பிட்டு, தாவா சொத்து என காண்பித்து நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தாக்கல் செய்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத ஆவணங்கள் என்று சொன்னால் சரியல்ல.

/உண்மை நகல்/
ஒம்/−திரு.தி. அன்பு,
மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
துறையூர்.